**SC No. 51/12 Date:10.01.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **),** காஞ்சிபுரம் **(**பக்கம் **)**

சாட்சியாகிய திரு**.**சம்பத் என்ற **Pw 6** நபரின் வாக்குமூலம் **(1876** ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது**.**

பெயர் **-** திரு**.**சம்பத்

த**/**பெ**, -** திரு**.** கணபதி

வயது **- 65**

தொழில் **-** கிராம நிர்வாக உதவியாளர் ஓய்வு

முதல் விசாரணை**:**

நான் தற்போது காஞ்சிபுரம் நகர் கதவு எண் 26 புத்தேரி என்ற முகவரியில் வசித்து வருகிறேன். கிராம நிர்வாக உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். 2011 ஆம் ஆண்டு ஒரு நாள் விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்திலிருந்து காவலர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு காஞ்சிபுரம் பஸ் ஸ்டாண்டுக்கு அருகே எதிரிகளை பிடித்து வைத்திருப்பதாகவும் என்னையும் கிராம நிர்வாக அலுவலரையும் வரச் சொன்னார்கள். நானும் கிராம நிர்வாக அலுவலரும் மாலை 4 மணிக்கு நாங்கள் இருவரும் சென்றோம். அங்கு இரண்டு எதிரிகளைப் பிடித்து வைத்திருந்தார்கள். பெயர் நினைவில்லை. அவர்கள் இருவரையும் போலீசார் விசாரித்தார்கள். அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் இரண்டாவதாக கையொப்பம் செய்தேன்.ஒன்றாவது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் EX P7. இரண்டாவது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் EX P8. அதன் பிறகு நாங்கள் வந்து விட்டோம். இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் காவல் நிலையத்திலிருந்து தொலைபேசியில் அழைத்து என்னையும் கிராம நிர்வாக அலுவலர் சொன்னதன் பேரில் காவல் நிலையம் சென்றோம். எதிரிகளும் கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன் பேரில் எங்களை அழைத்துக் கொண்டு நாகலத்து மேடு சுடுகாட்டிற்கு சென்றோம். அங்கு வைத்து இரண்டு எதிரிகளும் கத்தியை எடுத்து ஒப்படைத்தார்கள். கைப்பற்றுதல் நானும் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் இருக்கும் கையொப்பம் மட்டும் EX P9.வதுஎதிரி

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் EX P10. நான்காவது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில்உள்ள கையொப்பம் மட்டும் EX P11.ஆய்வாளர் விசாரித்தார்.

. குறுக்கு விசாரணை:

நான் குறிப்பிடும் நாள் நேரம் மற்றும் இடத்தில் வைத்து நான் குறிப்பிடும் முறையில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும் சொன்னால் சரியில்ல. நான் குறிப்பிடுவதைப் போல போலீசார் எந்த மத சேரும் தயாரிக்கவில்லை என்றும் சான்று பொருள்களை கைப்பற்ற வில்லை என்று அதில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரி அல்ல. எனது உயிர் அதிகாரிகளுக்கு பணிந்து சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ காலத்தில் அரசு ஊழியராக இருந்ததால் அதனை அனுசரித்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறும் சாட்சியம் ஏற்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை